# Deposition of  Witness
**(Chapter XXIII Code of Criminal Procedure )**
**In the Court of Judicial Magistrate No.III  Cuddalore.**

| | |
|---|---|
| Case Number | : C.C.No.1658 / 2025 |
| Police Station | : Thiruppapuliyur P.S |
| Deposition of witness for  Prosecution | :  LW1 / PW1 |
| Name | : கோபி |
| Father Name/Husband Name | : |
| Village | : |
| Taluk | : |
| Caste | : |
| Calling | : |
| Religion | : |

Solemnly affirmed  in accordance with the provision of Act X of 1873 விதிமுறைகளின் படி 05.08.2026 நாளாகிய இன்று திரு.M.Rajakumaresan,B.Com.,L.L.B., நீதித்துறை நடுவர் நீதிமன்றம் எண்.3(FAC), கடலூர் அவர்களால் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டது.

எதிரி ஆஜர் இல்லை. வழக்கறிஞர் ஆஜர்.

**முதன்மை விசாரணை**

01. நான் தற்போது கடலூர் திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக உள்ளேன். வழக்கு சமயத்தில் திருப்பாப்புலியூர் காவல் நிலையத்தில் பணியில் இருந்தேன்.

02. கடந்த 19.10.2018 ம் தேதி காலை 08.30 மணியளவில் கடலூர் கெடிலம் ஆற்று பகுதியில் திருட்டுதனமாக ஆற்று மணலை ஏற்றிக்கொண்டிருப்பதாக கிடைத்த தகவலின்பேரில் நானும் என்னுடன் பட்டியல் சாட்சி 2 மற்றும் உதவி ஆய்வாளர் சென்று கண்காணித்தபோது ஆஜர் எதிரி ஓட்டி வந்த மாட்டு வண்டியை நிறுத்தி சோதனை செய்த போது அதில் அரசு அனுமதியன்றி 0.10 யூனிட் அளவுள்ள ஆற்று மணலை கைப்பற்றி நிலையம் கொண்டு வந்து முதல்  தகவல் அறிக்கை பதிவு செய்து  ஆஜர் எதிரி கைது செய்யப்பட்டார்.  சம்பவம் குறித்து விசாரணை அதிகாரி என்னை விசாரித்தார்.

03. கைப்பற்றுதல் மகசரில் உள்ள 1வது சாட்சி கையெழுத்து என்னுடையது. **(மேற்படி கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)**

**குறுக்கு விசாரணை:-**

04. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லையென்றால் சரியல்ல. எதிரிமீது புள்ளிவிவரத்திற்காக போடப்பட்ட வழக்கு என்றால் சரியல்ல. வழக்கு ஆவணங்கள் காவல் நிலையத்தில் வைத்து எதிரிக்கு எதிராக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

Taken down by me in the presenceof
Accused, and read over to the
witness and admitted by her/him
to be correct.
(S/d. M.Rajakumaresan,B.Com.,L.L.B.,)
Judicial Magistrate No.III(FAC)
Cuddalore